## குடும்ப வன்முறை தடுப்பு சிறப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கோயமுத்தூர்.

முன்னிலை:- **செல்வி.N.திலகேஸ்வரி, B.Sc., L.L.M.,**
குடும்ப வன்முறை தடுப்பு சிறப்பு நீதித்துறை நடுவர்,
கோயமுத்தூர்.

2021 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2052 பிலவ வருடம் ஐப்பசி மாதம் 04 ம் நாள்
வியாழக்கிழமை

## **DVA No**. 208/2019

திருமதி.பூங்கொடி (35/21)
க/பெ.குணசேகர்,
எண்.35/36, வீ.ஜீ.கோவில் வீதி,
நாதே கவுண்டன்புதுார்,
ஆலாந்துறை (வழி),
கோயமுத்துார். ... மனுதாரர்

**// எதிர் //**

திரு.குணசேகர், (43/21)
த/பெ.பெரியசாமி ... எதிர்மனுதாரர்

இந்த வழக்கானது 26.09.2018 ம் தேதி DVA No.44/2018 என குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.VII, கோவை நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, விசாரணையிலிருந்து வந்த நிலையில் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதிபதி அவர்கள் உத்தரவு A.No.6/2019, நாள் 27.08.2019 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 30.08.2019 ம் தேதியன்று DVA No. 208/2019 என வழக்குக் கோப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இறுதியாக 11.10.2021 ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.அன்பழகன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.D.சசிக்குமார் மற்றும் திருமதி.B.அனிதா அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும், பரிசீலனை செய்து, இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவு

### <u>உத்தரவு</u>

இம்மனுவானது மனுதாரரால் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005, பிரிவு 12 மற்றும் விதி 6-ன் கீழ் பராமரிப்புத் தொகை, பாதுகாப்பு,

ஜீவனாம்சத் தொகை, வாடகை வீடு, மனுதாரரின் நகைகள் மற்றும் இவ்வழக்கிற்கு தக்கதெனக் கருதும் மற்ற பரிகாரங்களையும் வழங்க கோரியும் இம்மனுவில் மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:

இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகிய இருவருக்கும் கடந்த 27.03.2007 ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றும், மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரருக்கு திருமணத்தின்போது 20 சவரன் நகைகள், ரூ.18,000/- மதிப்புள்ள வீட்டு உபயோகப் பொருட்களும் வாங்கிக் கொடுத்ததாகவும், திருமணத்தின்போது எதிர்மனுதாரர் புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கும் தொழிலை செய்து மாதம் சுமார் ரூ.20,000/-க்கு மேல் சம்பாதித்து வந்ததாகவும் மற்றும் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வீட்டில் ஒரு பகுதியில் குடியிருந்து கொண்டு மீதம் உள்ள இரண்டுப்பகுதியை வாடகைக்கு விட்டு மாதம் ரூ.15,000/- ஈட்டிவருவதாக கூறியதாகவும், எதிர்மனுதாரர் திருமணத்திற்கு பிறகு சுமார் ஒரு மாதம் கழித்து தினமும் குடித்துவிட்டு மனுதாரரின் 20 பவுன் நகைகளையும் பலவந்தமாக பிடுங்கிக்கொண்டு, நண்பர்களுடன் ஊதாரித்தனமாக ஊர் சுற்றிவந்ததாகவும், திருமணத்தின் பயனாக மனுதாரருக்கு கடந்த 31.12.2007 ம் தேதியன்று ஒரு பெண் குழந்தைப் பிறந்தது என்றும், மனுதாரரின் பெற்றோர்களே அதற்குரிய அனைத்து செலவுகளையும் செய்ததாகவும், குழந்தைக்கு பெயர் சூட்டும் விழாவிற்குக் கூட அழைத்தும் எதிர்மனுதாரர் குழந்தையை பார்க்க வரவில்லை என்றும், குழந்தை பிறந்த பிறகு 2 வருடம் கழித்து எதிர்மனுதாரர் எந்தவித காரணமும் இன்றி விவாகரத்துகோரி மனுதாரர் மீது கோவை குடும்ப நல நீதிமன்றத்தில் மனு எண்.758/2009-ஐ தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த விவாகரத்துகோரிய மனுவை நடத்துவதற்கான செலவுக்கும் மற்றும் குழந்தைக்கும், மனுதாரருக்கும் பராமரிப்பு தொகை கேட்டு மனுதாரர் மனு எண்.215/2011-ஐ தாக்கல் செய்ததாகவும், மேற்படி எதிர்மனுதாரர் தாக்கல் செய்த விவாகரத்து மனுவை தள்ளுபடி செய்தும், மனுதாரர் தாக்கல் செய்த ஜீவனாம்ச மனுவினை அனுமதித்து மனுதாரருக்கும், குழந்தைக்கும் மாதம் தலா ரூ.3,000/-ம், மொத்தம் ரூ.6,000/-த்தை எதிர்மனுதாரர் மாதமாதம் கொடுக்கவேண்டும் என உத்தரவிட்டது என்றும், ஆனால் மேற்படி உத்தரவினை மதிக்காமலும், எதிர்மனுதாரர் மேற்படி ஜீவனாம்ச தொகையை கொடுக்காததாலும் மேற்படி நீதிமன்றம் எதிர்மனுதாரருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்து நிலுவையில் உள்ளதாகவும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பிறந்த சுமார் 11 வயதான குழந்தை நிகிதாவின் படிப்பு செலவிற்காக வருடம் சுமார்

ரூ.45,000/-லிருந்து ரூ.50,000/- வரை அனைத்து செலவுகளையும் மனுதாரரின் பெற்றோரே செலவு செய்து வருவதாகவும், மேலும் மேற்படி ஜீவனாம்ச வழக்கில் பிடியாணை நிலுவையில் உள்ளதை எதிர்மனுதார் அறிந்துகொண்டும், போலீசாருக்கு பயந்துக்கொண்டும், தற்போது தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும், எதிர்மனுதாரர் மேற்படி ஜீவனாம்ச வழக்கினை வாபஸ் வாங்குமாறு கூறி மனுதாரர் குடியிருக்கும் அவருடைய பெற்றோரின் வீட்டிற்கு வந்து அவரையும், அவருடைய பெற்றோரையும் கொலை மிரட்டல் விடுத்து கொடுமைப்படுத்துவதாகவும், பெற்றோரின் வீட்டில் வாழ்ந்து வர கஷ்டமாக இருப்பதால் மனுதாரருக்கும், இளவர் நிகிதாவிற்கும் தனியாக வாழ வீடு வாடகை எடுத்து அதற்கான வாடகை எதிர்மனுதாரர் கொடுக்கவும் மற்றும் மற்ற பரிகாரங்களையும் வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் பணிந்து இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பது என்னவென்றால், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005-ன் கீழ் பிரிவு 12 மற்றும் விதி 6(1)-ன் கீழ்

(a) எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மருத்துவம் மற்றும் அத்தியாவசிய பராமரிப்புத் தொகையாக மாதாமாதம் ரூ.15,000/- கொடுக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்குமாறும்,

(b) எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரருக்கும், அவரது மகளுக்கும் மற்றும் மனுதாரரின் பெற்றோருக்கும் பாதுகாப்புக் கொடுக்க உத்தரவு பிறப்பிக்குமாறும்,

(c) மனுதாரரும், மகள் நிகிதாவும் தனியாக வாழ ஒரு வீட்டினை வாடகை எடுத்துக்கொண்டு, அந்த வீட்டிற்கு மாத வாடகை மற்றும் முன்பணம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டுமென உத்தரவு பிறப்பிக்குமாறும்,

(d) எதிர்மனுதாரர் தந்தை என்ற முறையில், மேற்படி இளவர் நிகிதாவிற்கு பாதுகாப்பு, மருத்துவம் மற்றும் அத்தியாவசிய செலவிற்கு மாதம் ரூ.5,000/- மற்றும் கல்வி கட்டணம் ரூ.50,000/-ம் ஆண்டிற்கு கொடுக்க வேண்டுமென உத்தரவு பிறப்பிக்குமாறும்,

(e) திருமணத்திற்கு மனுதாரருக்கு அவருடைய பெற்றோர் கொடுத்த 20 பவுன் நகைகளை எதிர்மனுதாரர் திருப்பிக் கொடுக்க உத்தரவு பிறப்பிக்குமாறும்,

(f) மேற்படி எதிர்மனுதாரர் குடியிருக்கும் அவருடைய சொந்த வீட்டினை மனுதாரருக்கு தெரியாமல் எந்தவித வில்லங்கத்திற்கும் உட்படுத்தக்கூடாது என உத்தரவு பிறப்பிக்குமாறும்,

(g) இத்துடன் தாக்கல் செய்துள்ள படிவம் 2-ல் மனுதாரர் கோரியுள்ளபடி எதிர்மனுதாரருக்கு எதிராக கட்டளையிடுமாறும் மனுதாரர் இம்மனுவில் வேண்டியுள்ளார்.

3. எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர் தனது எதிருரையில் திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரரும், மனுதாரரும் மதுக்கரையில் உள்ள எதிர்மனுதாரர் வீட்டில் ஒன்றாக வாழ்ந்து வசித்து வந்ததாகவும், அவர்கள் இருவருக்கும் திருமணமான 1 மாத காலத்திலேயே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதாகவும், மனுதாரர் எப்போதும் அவரது பெற்றோர் சொல்வதைக்கேட்டு அடிக்கடி எதிர்மனுதாரருடன் வாக்கு வாதம் செய்து தனிக்குடித்தனம் போக வேண்டும் என வற்புறுத்தியதாகவும், மேலும் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் அவரது பெற்றோரிடம் சிறிது நாட்கள் இருந்து ஒரு முடிவை எடுத்துக்கொண்டு வருமாறு கூறி கடந்த 2007 ம் வருடம் மே மாதம் மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு வந்ததாகவும், அதன் பின்னிட்டு மனுதாரரின் பெற்றோரும் அன்றிலிருந்து இன்றுவரை எந்த ஒரு பேச்சு வார்த்தைக்கும் முன் வரவில்லை என்றும், பின்னர் மனுதாரரை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ அழைத்தபோது, மனுதாரருடைய தாத்தா எதிர்மனுதாரரிடம் எதிர்மனுதாரரின் வீட்டை மனுதாரரின் பெயருக்கு கிரையம் செய்யவேண்டும் என கூறியதாகவும், மேலும் மனுதாரர் அவரது பெற்றோரின் தூண்டுதலின் பேரில் எதிர்மனுதாரர் மீது காவல்நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்ததாகவும், மனுதாரருக்கு சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றும், அதனால் தான் கோவை குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து மனு ஒன்று தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்பதையும், மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிருரையின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர் தனது எதிருரையில் மனுதாரர் மனுவில் கூறியுள்ளபோல் எவ்வித குடும்ப வன்முறையும் எதிர்மனுதாரர் செய்யவில்லை என்றும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் பிரிந்து 12 வருடங்கள் ஆகிறது என்றும், மனுதாரரை வழக்குக்காக நீதிமன்றத்தில் தான் பார்த்துள்ளாரே தவிர வேறு எங்கும் சந்தித்தது கிடையாது என்றும், 12 வருடங்கள் பிரிந்து வாழும் இருவரின் இடையே எதிர்மனுதாரர் எவ்வாறு குடும்ப

வன்முறை செய்தார், எந்த தேதியில் செய்தார், என்ன குடும்ப வன்முறை செய்தார் என்று மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் எங்குமே குறிப்பிடவில்லை என்றும், மாண்பமை கோவை கூடுதல் குடும்ப நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் பொழுது ஜீவனாம்சமாக மாதம் ரூ.1,500/-ம் பெற்று வந்ததாகவும், மேலும் மனுதாரருக்கு ஆதரவாக ஜீவனாம்ச வழக்கில் தீர்ப்பும் பெற்றுள்ளார் என்றும், எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

6. மனுதாரர் தரப்பில், மனுதாரர் பூங்கொடி என்பவர் மட்டும் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் மட்டும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் குணசேகரன் என்பவர் எ.ம.சா.1 ஆகவும், உடையமணி என்பவர் எ.ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனுவில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

மனுதாரர் தனது மனுவில் தனக்கும், எதிர்மனுதாரருக்கும் 27.03.2007 ம் தேதியன்று திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின் பயனாக நிகிதா என்ற பெண் குழந்தை 31.12.2007 ம் தேதியன்று பிறந்ததாக கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தனது எதிருரையில் திருமணம் நடைபெற்றதையும், பெண் குழந்தை பிறந்ததையும் ஒப்புக்கொண்டுள்ளார். மனுதாரர் மேற்கூறிய சங்கதிகள் தொடர்பாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாத நிலையிலும் இந்திய சாட்சியச் சட்டப்பிரிவு 58-ன் படி எதிர்மனுதாரர் மேற்கூறிய சங்கதிகளை ஒப்புக்கொண்டுள்ளபடியால் அவைகளை நிரூபணம் செய்ய சாட்சியங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவேண்டிய அவசியமில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே குடும்ப வன்முறை தடுப்பு சட்டப்பிரிவு 2(f)-ன் கீழ் கூறியுள்ளபடி திருமண உறவு ஏறபட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

8. மனுதாரர் தனது மனுவில் திருமணத்திற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் தினமும் குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து கொடுமைப்படுத்தி அனைத்து நகைகளையும் பலவந்தமாக பிடுங்கிக் கொண்டதாகவும், அன்றாட செலவுக்கு கூட பணம்

கொடுக்காமலும், நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு குடிப்பதும், ஊர் சுற்றுவதும், ஊதாரித்தனமாக இருந்து வந்தார் என்றும், மனுதாரர் கருவுற்றிருந்த போதும் குடிப்பதற்கு பணமும், நகையும் மனுதாரரின் பெற்றோர் வீட்டில் வாங்கி வந்தால்தான் வீட்டிற்குள் சேர்ப்பேன் என கூறி அடித்து அவரது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு சென்று விட்டதாகவும், குழந்தை பிறந்த பிறகும் கூட மனுதாரரையும், அவரது குழந்தையையும் கூட எதிர்மனுதாரர் பராமரிக்கவில்லை என கூறியுள்ளார். அதற்கு எதிர்மனுதாரர் தனது எதிருரையில் மனுதாரர் அவரது பெற்றோர் சொல்வதை கேட்டு தன்னிடம் வாக்குவாதம் செய்துவந்ததாகவும், 2007 ம் வருடம் மே மாதம் பெற்றோரிடம் சிறிது நாட்கள் கழித்து ஒரு முடிவை எடுத்துக்கொண்டு வருமாறு கூறி தான்தான் அவரது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு வந்ததாகவும், அன்றிலிருந்து இன்று வரை மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில்தான் இருந்து வருவதாகவும், தன்னுடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை என கூறிவிட்டதாகவும் கூறியுள்ளார். ம.சா.ஆ.1 ஆனது HMOP No.758/2009-ன் உத்தரவின் நகலாகும். ம.சா.ஆ.1-ஐ பரிசீலனை செய்ததில் எதிர்மனுதாரர் விவாகரத்து வேண்டி மனுதாரர் மீது கோவை மாண்பமை கூடுதல் குடும்பநல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் என்பதும், அதில் 14.08.2015 ம் தேதியன்று மனு தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. ம.சா.ஆ.1-ஐ பரிசீலனை செய்ததில் இவ்வழக்கின் மனுதாரர் விவாகரத்து மனுவில் எதிர்மனுதாரராக திருமணம் முடிந்தபிறகு 20 பவுன் நகைகள் வேண்டுமென கேட்டு மிரட்டி எதிர்மனுதாரர் நகைகளை பறித்து வைத்துக் கொண்டதாகவும், குடித்துவிட்டு வந்து நகை வேண்டும், பணம் வேண்டும் என கொடுமைப்படுத்தினார் என்றும், தனது பதிலுரையில் கூறியுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. ம.சா.ஆ.2 ஆனது 14.08.2015 ம் தேதியன்று இவ்வழக்கின் மனுதாரர் தனக்காகவும், தனது இளவர் மகளுக்காகவும் கோவை மாண்பமை கூடுதல் குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எம்சி மனு எண். 215/2011 ல் மனுதாரர் மற்றும் அவரது இளவர் மகளுக்கும் தலா மாதம் ரூ.3,000/- எதிர்மனுதாரர் மாத ஜீவனாம்சமாக கொடுக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. ம.சா.ஆ.2-ஐ பரிசீலனை செய்ததிலும் அம்மனுவிலும் இவ்வழக்கின் மனுதாரர் இம்மனுவில் கூறியுள்ள சங்கதிகளைத்தான் கூறியுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. எதிர்மனுதாரர் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் தனக்கு குடிப்பழக்கம் இல்லை என்றோ, தான் மனுதாரரை அடித்து நகைகளை பிடுங்கவில்லை என்றோ மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. ம.சா.1 ம் தனது குறுக்கு விசாரணையில் தான் தனது பிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் குடிப்பதாக சொல்லியிருப்பது பொய் என்பதை

மறுத்துள்ளார். மேலும் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள எதிர்மனுதாரர் அவர் சாட்சியபிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துவிட்டு குறுக்கு விசாரணைக்கு ஆஜராகததால் அவரது தரப்பு சாட்சியம் இந்நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுள்ளது என்பது வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் தெரிய வருகிறது. மேலும் எ.ம.சா.2 ம் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்துள்ளார். எனவே இந்நீதிமன்றம் எதிர்மனுதாரர் தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய முன்வரவில்லை என்றே கருதுகிறது. ம.சா.1 ன் சாட்சியம், ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆகியவற்றை கொண்டு பார்க்கும்போது மனுதாரர் மனுவில் கூறியுள்ளவாறு எதிர்மனுதாரர் திருமணம் ஆன பிறகு குடித்துவிட்டு வந்து மனுதாரரை பணம் வேண்டும், நகை வேண்டும் என்று கேட்டு அடித்து கொடுமைப்படுத்தியுள்ளார் என்பது நிரூபணமானதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மனுதாரர் தனது மனுவில் திருமணத்தின் போது தனக்கு போட்ட 20 பவுன் நகையை எதிர்மனுதாரர் பிடுங்கிக் கொண்டதாக கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தனது எதிருரையில் 20 பவுன் நகைகள் குறித்து எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் எதிருரையில் 6 ம் பத்தியில் மனுதாரரை எதிர்மனுதாரர் அவரது பெற்றோருடன் சிறிது நாட்கள் இருந்து ஒரு முடிவை எடுத்துக்கொண்டு வருமாறு கூறி கடந்த 2007 ம் வருடம் மே மாதம் மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு வந்ததாக கூறியுள்ளார். மேலும் மனுதாரர் பாதுகாப்பு அதிகாரியிடம் கொடுத்துள்ள தகவல்களில் மனுதாரரின் 20 பவுன் நகைகள் எதிர்மனுதாரர் வீட்டில்தான் உள்ளதென்றும் தனது கணவருக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டு குழந்தையும் உள்ளதாகவும் கூறியுள்ளார். இதன்மூலம் எதிர்மனுதாரர் அப்போது மனுதாரர் தன்னுடைய நகைகளை எடுத்துச் சென்றதாக எதுவும் கூறவில்லை என்பதும் மனுதாரர் நிரந்தரமாக எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து சென்றதாகவோ தெரிவிக்கவில்லை என்பதும் தெரிய வருகிறது. மேற்கூறிய சங்கதியை கொண்டு பார்க்கும்போது மனுதாரரை எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு கொண்டு சென்று விடும்போது மனுதாரர் தனது நகைகளையும் எடுத்துச் சென்றுவிட்டதாக நிரூபணமாகவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில் “2007-ல் நான் எதிர்மனுதாரர் மீது போத்தனூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் நான் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். எப்போது என்றால் திருமணம் நடந்து 3 மாதம் கழித்து 2007-ல் கொடுத்தேன். என்னவென்று புகார் அளித்தேன் என்றால் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று கோரி புகார் அளித்தேன். அந்தப் புகாரில் எதிர்மனுதாரர் 20 பவுன் நகை வாங்கிக்கொண்டார் என்ற

விபரத்தினை நான் கூறவில்லை என்றால் சொன்னேன். என்னை விசாரித்த போலீசார் பெயர் தெரியுமா என்றால் ஞாபகத்தில் இல்லை" என்றும் கூறியுள்ளார். எதிர்மனுதாரரும் தனது பதிலுரையில் மனுதாரர் தன் மீது காவல்நிலையத்தில் புகார் அளித்ததாகக் கூறியுள்ளார். இதன்மூலம் மனுதாரர் எதிர்மனுதாரர் மீது 2007-லேயே காவல்நிலையத்தில் புகார் அளித்து அந்த விசாரணையின் போது தனது 20 பவுன் தங்க நகைகளை எதிர்மனுதாரர் தன்னிடமிருந்து வாங்கிக்கொண்டார் என்ற விவரத்தினை கூறியுள்ளார் என்பதாகவே இந்நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது. மேற்கூறிய சாட்சியங்களை கொண்டு பார்க்கும்போது எதிர்மனுதாரர் மனுதாரருடைய 20 பவுன் தங்க நகைகளை அவரிமிடருந்து பெற்றுக்கொண்டுள்ளார் என்பது நிரூபணமாவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. மனுதாரர் தனது மனுவில் எதிர்மனுதாரர் சம்பாதித்த அனைத்து பணத்தையும் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு குடிப்பதும், ஊர் சுற்றுவதும், ஊதாரித்தனமாக இருந்துவருவதாகவும், தனக்கும், தன் குழந்தையையும் பராமரிக்கவில்லை என்றும் கூறியுள்ளார். இதனை எதிர்மனுதாரர் தனது எதிருரையில் மறுத்து மனுதாரருடைய தாத்தா எதிர்மனுதாரருடன் மனுதாரர் சேர்ந்து வாழ வேண்டும் என்றால் அவரது பெயரில் உள்ள வீட்டை தனது பேத்தியின் பெயருக்கு மாற்றி எழுதி கொடுக்க வேண்டும் என கேட்டதாகவும் கூறியுள்ளார். ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "எதிர்மனுதாரரின் பெயரில் எந்தவித சொத்தும் இல்லை என்றால் சரிதான். அவரது தாயாரின் பெயரில் தான் உள்ளது. எதிர்மனுதாரர் குடியிருக்கும் வீடு அவரின் தாயார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அங்கு யார் யார் குடியிருக்கிறார்கள் என்றால் எதிர்மனுதாரரும், அவரது தாயாரும் குடியிருக்கிறார்கள். மேலும் வாடகைக்கும் விட்டுள்ளார்கள்" என்றும் கூறியுள்ளார். மேலும் அவர் "என் தாத்தா என் பேத்தி பேரில் ஒரு வீட்டை செட்டில்மென்ட் எழுதிவைத்தால் தான் சேர்ந்து வாழ சம்மதிப்பேன் என்று கூறினார் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் பலமுறை என்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு நண்பர்கள் மூலம் முயற்சி எடுத்தார் என்றாலும், நான் தான் காரணமின்றி அவருடன் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல, தற்போதும் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழத் தயாராகத்தான் உள்ளார் என்றால் ஜீவனாம்ச தொகை கொடுத்தால் சேர்ந்து வாழத் தயாராக உள்ளேன்" என்றும் கூறியுள்ளார். ம.சா.1 ன் சாட்சியத்தைக் கொண்டு பார்க்கும்போது எதிர்மனுதாரர் மனுதாரரையும், அவரது குழந்தையையும் பராமரிக்கவில்லை என்பது தெரிய வருகிறது. ம.சா.ஆ.2-ஐ பரிசீலனை செய்ததில் மாண்பமை கோவை கூடுதல்

குடும்ப நல நீதிமன்றம் எம்சி மனு எண். 215/2011ல் 14.8.2015ம் தேதியன்று மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் மாதம் தலா ரூ.3,000/- ஜீவனாம்சமாக எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என்ற உத்தரவினை பிறப்பித்துள்ளது என்பது தெரிய வருகிறது. எதிர்மனுதாரர் அவ்வுத்தரவினை நிறைவேற்றவில்லை என்பது ம.சா.1ன் சாட்சியத்தின் மூலம் தெரிய வருகிறது. மேற்கூறிய சாட்சியங்களை கொண்டு பார்க்கும்போது எதிர்மனுதாரர் திருமணம் ஆன புதிதிலேயே குடித்துவிட்டு வந்து மனுதாரரை நகை, பணம் கேட்டு அடித்தும், அவரது 20 பவுன் நகையை பிடுங்கிக்கொண்டும் அவரையும் குழந்தையும் பராமரிக்கவில்லை என்பதும், நிரூபணமாவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. இதன்மூலம் குடும்ப வன்முறை தடுப்புச் சட்டப்பிரிவு 3(a) மற்றும் 3(b)ன் கீழ் எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு குடும்ப வன்முறை நிகழ்த்தியுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. எதிர்மனுதாரர் தன்னுடைய கூடுதல் பதிலுரையில் தானும், மனுதாரரும் பிரிந்து 12 வருடங்கள் ஆகிறது என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு குடும்ப வன்முறையை செய்யவில்லை என்றும் கூறியுள்ளார். குடும்ப வன்முறை தடுப்பு சட்டப்பிரிவு 2(f)-ன் படி மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்த காலக்கட்டத்தில் குடும்ப வன்முறை நிகழ்த்தியிருந்தாலும், அவர்கள் பிரிந்த பிறகும் அவர்களுக்கிடையே குடும்ப உறவு இருப்பதால் இச்சட்டத்தின் கீழ் பரிகாரம் பெறலாம் என்றே கூறப்பட்டுள்ளது. மேலும் மாண்பமை அலகாபாத் உயர்நீதிமன்ற உத்தரவின்படி "A Division bench of Justice Ramesh Sinha and J.Saroj Yadav constituted on a reference by a single Judge, who was skeptic about the judgement of single judges in Akilesh Kumar Singh and another VS. State of Uttar Pradesh another in Crl.Revision No.885/2015 and Santhosh Kumar Yadav and 5 others VS. State of Uttar Pradesh and another 2015(9)ADJ 400 “No limititaion period to file DVA as it is a beneficial legislation” என்ற ஜீவனாம்ச வழக்கின்படி இம்மனு ஏற்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 14.08.2015ல் ஜீவனாம்ச உத்தரவு மனுதாரருக்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட்ட பிறகும் கூட எதிர்மனுதாரர் மனுதாரரையும், அவரது குழந்தைக்கும் ஜீவனாம்ச தொகையை கொடுக்காமல், அவர்களை பராமரிக்காமல் விட்டு மேலும் மனுதாரருக்கு மனரீதியிலான கொடுமைகளை இழைத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. எனவே இந்நீதிமன்றம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு குடும்ப வன்முறை நிகழ்த்தியுள்ளதாகவே கருதுகிறது.

**12.** மனுதாரர் தனது மனுவில் எதிர்மனுதாரர் மாதம் ரூ.15,000/-ஐ தனக்கு பராமரிப்பு தொகையாகவும், தனது மகளுக்கு மாதம் ரூ.50,000/-மும் கல்வி கட்டணமாக ஆண்டுதோறும் கொடுக்கவேண்டும் எனவும் பரிகாரம் கேட்டுள்ளார். மனுதாரர் தனது தரப்பில் தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சம்மந்தமான பிரமாண வாக்குமூலத்தில் தனக்கு எவ்வித வருமானமும் இல்லை என்றும், தனது 20 பவுன் நகைகள் சம்மந்தமான விவரங்களையும், தனக்கு குழந்தைக்கு மாதம் ரூ.50,000/- செலவு ஆவதையும் குறிப்பிட்டுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சம்மந்தமான பிரமாண வாக்குமூலம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ம.சா.1 ன் குறுக்கு விசாரணையின் போது, “எதிர்மனுதாரர் டான்ஸ் பிராக்டீஸ் சொல்லி தருகிறார்" என்று ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். எதிர்மனுதாரரே தனது எதிருரையில் மனுதாரரின் தாத்தா எதிர்மனுதாரருக்கு சொந்தமான வீட்டை மனுதாரரின் பெயரில் எழுதி கொடுக்க வேண்டும் என்று கேட்டதாக கூறியிருப்பதையும் கொண்டு பார்க்கும்போது, எதிர்மனுதாரர் சொந்தமாக தொழில் செய்து சம்பாதித்து வருவதும், அவருக்கு வீடு வாடகைக்கு விடப்பட்டு வருமானம் வருவதும் உண்மை என தெரிய வருகிறது. ஏற்கனவே மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் தலா மாதம் ரூ.3,000/- எம்சி மனு எண்.215/2011 ல் உத்தரவாகியுள்ள நிலையிலும் எதிர்மனுதாரர் அவ்வுத்தரவின் படி மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் இன்றுவரையிலும் ஜீவனாம்சம் தொடர்ந்து வழங்காமல் இருந்து வருவதை கருத்தில் கொண்டு இந்நீதிமன்றம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மனு தேதியிலிருந்து மாத ஜீவனாம்சமாக வழங்க வேண்டும் எனவும், மனுதாரரின் இளவர் குழந்தை நிகிதாவிற்கு மாதம் ரூ.3,000/-(ரூபாய் மூவாயிரம் மட்டும்) மனு தேதியிலிருந்தும், கல்விகட்டணமாக ஆண்டிற்கு ரூ.50,000/-ஐ (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) உத்தரவு தேதியிலிருந்தும் கொடுக்க வேண்டும் என உத்தரவிடுவது உகந்ததாக இருக்கும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரருக்கும், அவரது மகளுக்கும் மற்றும் மனுதாரரின் பெற்றோருக்கும் அவர்கள் குடியிருக்கும் எல்லைக்குட்பட்ட சரக காவல்துறையினர் மூலம் பாதுகாப்புக் கொடுக்க உத்தரவு வழங்கலாம் என்றும், மனுதாரரும் அவரது மகளும் தனியாக வாழ்வதற்கு இல்லற வீட்டை போன்றே வசதியுடைய ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொடுத்து அதற்கு முன்பணமும், மாத வாடகையும் செலுத்தி வர வேண்டும் எனவும், திருமணத்திற்காக மனுதாரருக்கு போட்ட 20 பவுன் தங்க நகையை எதிர்மனுதாரர் திருப்பி கொடுக்க வேண்டும் எனவும்,

எதிர்மனுதரார் குடியிருக்கும் அவரது சொந்த வீட்டினை மனுதாரருக்கு தெரியாமல் எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தக்கூடாது என உத்தரவிடலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. **இறுதியாக,** இந்நீதிமன்றம் இம்மனுவை அனுமதித்து,

(அ) எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)மும், மனுதாரரின் இளவர் குழந்தை நிகிதாவிற்கு மாதம் ரூ.3,000/- (ரூபாய் மூவாயிரம் மட்டும்)மும் மாத ஜீவனாம்சமாக மனு தேதியிலிருந்து வழங்க வேண்டும் எனவும், மனு தேதியிலிருந்து வரும் தொகையை கணக்கிட்டு உத்தரவு தேதியிலிருந்து 2 மாதத்திற்குள்ளாக செலுத்த வேண்டுமெனவும், மாதந்திர ஜீவனாம்ச தொகையினை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5 ம் தேதிக்குள்ளாக வழங்க வேண்டும் என உத்தரவிட்டும்,

(ஆ) எதிர்மனுதாரர் மனுதாரரின் இளவர் குழந்தை நிகிதாவிற்குரிய கல்விகட்டணமாக ஆண்டிற்கு ரூ.50,000/-ஐ (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) உத்தரவு தேதியிலிருந்து கொடுக்க வேண்டும் என உத்தரவிட்டும்,

(இ) எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரருக்கும், அவரது மகளுக்கும் மற்றும் மனுதாரரின் பெற்றோருக்கும் அவர்கள் குடியிருக்கும் எல்லைக்குட்பட்ட சரக காவல்துறையினர் மூலம் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்தும்,

(ஈ) மனுதாரரும், அவரது மகள் நிகிதாவும் தனியாக வாழ இல்லற வீட்டின் வசதியை போன்றே வசதியுடைய ஒரு வீட்டினை வாடகைக்கு எடுத்துக் கொடுத்து, அந்த வீட்டிற்கு மாத வாடகை மற்றும் முன்பணம் கொடுத்து எதிர்மனுதாரர் உத்தரவு தேதியிலிருந்து 2 மாதத்திற்குள் குடியமர்த்த வேண்டுமென உத்தரவு பிறப்பித்தும்,

(உ) திருமணத்திற்கு மனுதாரருக்கு அவருடைய பெற்றோர் கொடுத்த 20 பவுன் தங்க நகைகளை எதிர்மனுதாரர் உத்தரவு தேதியிலிருந்து 2 மாதத்திற்குள் மனுதாரரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்தும்,

(ஊ) மேற்படி எதிர்மனுதாரர் குடியிருக்கும் அவருடைய சொந்த வீட்டினை மனுதாரருக்கு தெரியாமல் எந்தவித வில்லங்கத்திற்கும் உட்படுத்தக்கூடாது எனவும் இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

மேற்கண்ட உத்தரவினை கோவை பாதுகாப்பு அலுவலருக்கும், ஆலந்துறை காவல்நிலைய ஆய்வாளர் அவர்களுக்கும் உத்தரவுகளை நிறைவேற்றம் செய்யவும், சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதற்கும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2021 ம் வருடம் அக்டோபர் மாதம் 21 ம் நாள் வியாழக்கிழமையன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்./-N.திலகேஸ்வரி
நீதித்துறை நடுவர்,
குடும்ப வன்முறை தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

ம.சா.1. திருமதி.பூங்கொடி

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

ம.சா.ஆ.1 எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்து மனுவான HMOP No.758/2009-ற்கான உத்தரவின் நகல்

ம.சா.ஆ.2 மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எம்.சி. மனு எண். 215/2011-ற்கான உத்தரவின் நகல்

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

எ.ம.சா.1 திரு.குணசேகரன்
எ.ம.சா.2 திரு.உடையமணி

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u> இல்லை**

ஒம்./-N.திலகேஸ்வரி
நீதித்துறை நடுவர்,
குடும்ப வன்முறை தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

**நகல்:**
1. மனுதாரர்
2. பாதுகாப்பு அதிகாரி அலுவலர், கோயமுத்தூர்.
3. காவல் ஆய்வாளர், ஆலந்துறை காவல்நிலையம், கோயமுத்தூர்.